8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

144. தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

108. கோரிக்கை எண் 31.—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண். 31—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் இணைப்புகள் 1982.83 (தமிழ், ஆங்கிலம்).

110. 1982-83-ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறையின் சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

111. கோரிக்கை எண். 44— எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I

(7 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 519-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டிற்கும் கேரள மாநிலத்திற்கும் இடைப் பட்ட மாநில பொது எல்லை தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களை ஒட்டி வருகிறது. இந்த மாநில பொது எல்லை 806 கிலோ மீட்டர்கள் (சுமாராக 500 மைல்கள்) தூரம் உள்ளது. இந்தப் பொது எல்லையை ஏற்கனவே (மாநில சீர் அமைப்புக்கு முன்னால்) கூட்டாக நில அளவை செய்யப்பட்டவை, நில அளவை செய்யப்படாதவை என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஏற்கெனவே நில அளவை செய்யப்பட்ட பகுதிகள் திறந்த எல்லையின் நீளம் சுமார் 558 கி.மீ. (330 மைல்கள்). இந்த எல்லையில், முன்பே சர்வே செய்யும்போது எல்லைக்கற்கள் நடப் பட்டன. ஏற்கனவே நில அளவை செய்யப்பட்ட இப்பகுதியை வருடத்திற்கு 50 மைல்கள் வீதம் சரிபார்க்க வேண்டும். சரி பார்க்கும் வேலையின்போது ஏற்கெனவே கற்கள் நடப்பட்ட இடங்களில் கற்கள் காணாமல் இருந்தால், அவற்றை சரியான இடங்களில் கூட்டாக இருமாநில அளவர்களாலும் அளந்து பார்த்து கற்கள் நடப்படும்.

கூட்டாக நில அளவை செய்யப்படாத பகுதி நீலகிரி கன்னியாகுமரி, மற்றும் செங்கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய மாவட்டங்களில் உள்ளது. இந்த எல்லையின் நீளம் சுமார் 272 கி.மீ. (170 மைல்கள்). இப் பகுதிகள் இரு மாநில அலுவலர்களாலும் தற்போது கூட்டாக நில அளவை செய்யப்பட்டு, பூமியில் (காடுகள் தவிர) கற்கள் நடப் பட்டு உள்ளன.

(ஆ) ஏற்கனவே நில அளவை செய்யப்பட்ட பகுதிகளை வருடத்திற்கு 50 லினியர் மைல்கள் வீதம் கூட்டாக இரு மாநில அலுவலர்களாலும் சரிபார்த்து ஆவணங்கள் தயாரிக்க சுமார் பத்து வருடங்கள் ஆகும்,

நில அளவை செய்யப்படாத பகுதிகளில் கூட்டாக நில அளவை செய்து ஆவணங்கள் தயாரித்து இரு மாநில அரசு களாலும் அங்கீகாரம் செய்ய சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இணைப்புகள்.

(52 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 31.

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் கொள்கை விளக்கக் குறிப்பு.

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் என்ற தலைப்பின் கீழ் 1982—83 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31—ல் ரூ. 4,110.31 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்ட மன்ற பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கட் தொகை 412 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 73.16 இலட்சம் பேர், பழங்குடியினர் 3.11 இலட்சம் பேர். மொத்த மக்கட் தொகையில் இது முறையே 17.76 சதவீதமும் 0·76 சதவீதமும் ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 39.05 சதவீதம். இதில் கல்வி அறிவு பெற்ற ஆதி திராவிடர் 21.81 சதவீதமும் பழங்குடியினர் 9.02 சதவீதமும் ஆவர்.

3. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற் காக அரசு கொண்டு வந்த பல்முனைத் திட்டங்களின் கீழும் கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களின் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர் —பழங்குடியினர் நலத்துறையினர் செயற்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத் தைத் தீவிரப்படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட உட்பகுதித் திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு